**கூடுதல் மாவட்ட  உரிமையியல் நீதிமன்றம்,திருப்பூர்.**
**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ** L.L.M.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,  திருப்பூர்.**

**2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் நாள் திங்கள்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ விசுவாவசு வருடம், மாசி திங்கள் 18ம் நாள்**

**இ.ம.எண்.122/2026**
**இன்**
**அ.வ.எண்.250/2019**

கோமதி ..மனுதாரர்/4ம் பிரதிவாதி

..எதிர்..

யசோதா ..எதிர்மனுதாரர்/வாதி

கடந்த 24.02.2026ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ஞானசுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சரவணன் அவர்கள் முன்னிலையாகியும், நிகழ்த்திய இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 8 விதி 1Aன் கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :–**

மனுதாரர் அசல் வழக்கில் 5ம் பிரதிவாதி. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் விளம்புகை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல்

வழக்கில் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு 5ம் பிரதிவாதி தரப்பில் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. வழக்கு விசாரணைக்கு தேவையான மனு ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து தற்போது தான் கிடைக்கப்பெற்றது. மேற்படி மனு ஆவணம் அசல் வழக்கின் தீர்வுக்கு முக்கிய ஆவணம் என்பதால் மனு ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :–</u>

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனு ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டுமென்று மனுதாரர் உண்மையில் நினைத்திருந்தால் அதனை ஆரம்ப காலத்திலேயே தாக்கல் செய்திருப்பார். மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணம் பொய்யானது. மனு ஆவணத்தை சான்றாவமாக ஏற்க இயலாது. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5.** மனுதாரர் தரப்பில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ?என்பதே ஆகும்.

**6. <u>தீர்வு</u> :–**

**6.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனு ஆவணம் அசல் வழக்கின் தீர்வுக்கு அவசியமான ஒன்று என்பதால் இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனு ஆவணங்கள் தாக்கல் செய்வதற்கான தகுந்த காரணத்தை மனுதாரர் மனுவில் குறிப்பிடவில்லை என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6.4** அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இரு தரப்பினருக்கும் அவர்களது தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை தாக்கல் செய்வதற்கு போதிய வாய்ப்பளித்து அசல் வழக்கில் தீர்வு காண்பது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02ம் நாள் அவையறிய பகரப்பட்டு, இன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.02 15:08:34 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

<u>**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u> : இல்லை

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.02 15:08:57 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**உத்தரவு**
இ.ம.எண்.317/2024
அ.வ.எண்.136/2019
02.03.2026
கூ.மா.உ.நீ.மன்றம்
திருப்பூர்.